<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 203/2012**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>வாக்குமூலம் – பி.வா.சா. 5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்புசாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 20.08.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஆகஸ்ட் 20ம் நாள் சாட்சியம்.

---

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு விஸ்தீரண பூமிகள் பாத்தியப்பட்டு இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. வண்ணாத்திகாட்டிற்கு கட்டுப்பட்ட பூமி 1ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்ட பூமி. எந்த வருடத்தில் கிரையம் பெற்ற பூமி என்று எனக்குத் தெரியாது. அந்த பூமியை 1,2–வது பிரதிவாதிகள் சேர்ந்து கிரையம் பெற்றார்கள். 1ம் பிரதிவாதியின் மொத்த சொத்தில் 2ம் பிரதிவாதிக்கு சரிபாதி பாத்தியம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நீதிமன்றம் மூலம் வாதிகள் கிரையம் பெற்று விட்டார்கள் என்றால் சரிதான். உயில்சாசனம் சுமார் 5 ஏக்கர் பூமியைப் பொறுத்து எழுதப்பட்டது. உயில்சாசனத்தில் கட்டுப்பட்ட பூமியின் புல எண்கள் எனக்குத் தெரியாது. செல்லமுத்து வாதிகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் கிரையம் கொடுத்த விஸ்தீரண பூமி நீங்கலாக மீதம் இருந்த பூமியைப் பொறுத்து உயில் சாசனம்

எழுதப்பட்டது என்றால் சரிதான். உயில்சாசனம் எழுதிய போது 1ம் பிரதிவாதி படுக்கையில் இருந்தார் என்றால் சரியல்ல. வீட்டில் நடமாட்டத்துடன் இருந்தார். செல்லமுத்துக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக வழக்குகள் நடைபெறுவதால் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமியைப் பொறுத்து அவர்களது பேரன்களுக்கு உயில்சாசனம் எழுதி வைப்பதாக கூறினார். இந்த உயில் சாசனத்தை தவிர வேறு ஆவணங்கள் நான் எழுதியது கிடையாது. நான் சொல்லப்பட்ட தேதியில் உயில் சாசனம் எழுதப்படவில்லை என்றும் 2 முதல் 4 வது ரையிலான பிரதிவாதிகளால் போலியாக தயார் செய்யப்பட்ட உயில் சாசனத்தை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த உயில் சாசனம் என்னால் எழுதப்பட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஓம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.